**சுருக்கம்**

சிலை நிறுவுதல் – திருநெல்வேலிமாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை வட்டம், வார்டு எண்.3, பிளாக் எண்.12, நகரளவு எண்.1153/1ஏ–ல் மாநகராட்சி சாலை நடுவில் " வீரன் அழகுமுத்து கோன் சிலை" நிறுவ அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்:71** **நாள் : 03.05.2010**

**படிக்கப்பட்டது :**

1. அரசாணை நிலை எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி 5) துறை, நாள்: 08.09.2008
2. ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் கடித எண்.டிபி2/644/07, நாள்.29.12.2009.
3. பாளையங்கோட்டை வட்டாட்சியரின் கடிதம் எண்.அ3/2648/10 நாள்.6.4.2010.
4. மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம் அவர்களின் கடித எண்.சி2/171/2010, நாள்.12.4.2010.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.16795/2010/எம்1, நாள்: 22.4.2010

----

**ஆணை :**

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் வார்டு எண்.3, பிளாக் எண்.12, நகரளவு எண்.1153/1ஏ–ல் " வீரன் அழகுமுத்து கோன் சிலை" அமைக்க அனுமதி வழங்கிடக் கேட்டு யாதவ மகாசபை, மாவட்ட செயலாளர், திரு.S.சரவணன் என்பவர் விண்ணப்பித்துள்ளார் என்றும் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் அவர்கள் மேற்படி மனு மீது, திருநெல்வேலி மாநகராட்சியின் 30.11.2009 ம் தேதிய மாமன்ற அவசரக் கூட்டத் தீர்மானம் எண்.570 ன்படி பிரசன்ன விநாயகர் கோவில் தெரு மற்றும் லங்கர் கானா தெரு சந்திக்கும் இடமான அல்போன்ஸ் பள்ளிக்கு எதிர்புறம் அமைந்துள்ள மாநகராட்சி சாலை, நடுவில் வீரன் அழகு முத்துக்கோன் சிலை அமைக்க விதிகளுக்கு உட்பட்டு, சிலை நிறுவிட மாமன்றம் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் திருநெல்வேலி மாநகரக் காவல் ஆணையரின் கடிதத்தில், "வீரன் அழகு முத்துக் கோன் சிலை" அமைக்க பாளையங்கோட்டை வட்டம் மற்றும் கிராமம், வார்டு என்.3, பிளாக் எண்.12, நகரளவு எண்.1153/1ஏ – ல் லூர்து நாதன் சிலை அமைந்துள்ள வளாகத்தின் பின்புறம் உள்ள

காலியிடத்தினை கவனத்தில் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளதாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2. பாளையங்கோட்டை வட்டாச்சியர் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பாளையங்கோட்டை வட்டம், மற்றும் கிராமம், வார்டு 3, பிளாக் எண்.12, நகரளவை எண்.1153/1ஏ–ல் அல்போன்ஸ் நினைவு நடுநிலைப் பள்ளியின் முன்பகுதியில் பாளையங்கோட்டை வார்டு அலுவலகத்திற்கு செல்லும் பாதையின் நடுவில் தெற்குப் பஜார் சாலையின் நேர் எதிராக 3 சதுர மீட்டர் அளவு கொண்ட இடத்தில் “வீரன் அழகு முத்துக் கோன் சிலை“ நிறுவலாம் என பரிந்துரை செய்துள்ளார் என்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி இடம் நில அளவை பதிவேட்டின்படி பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, சர்க்கார் புறம்போக்கு என உள்ளது என்றும் மேற்படி இடம் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது என்றும் பாளையங்கோட்டை வட்டாட்சியர் தெரிவித்துள்ளதாகவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் 22.04.2010 ஆம் நாளிட்ட தமது கடிதத்தில், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் மேற்படி சிலை நகர்மன்ற தீர்மானம் எண்.570, நாள் 30.11.2009 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கருத்துரு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பட்டதாகவும், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் மற்றும் பாளையங்கோட்டை வட்டாட்சியர் சிலை அமைக்க பரிந்துரை செய்துள்ளார் என்றும், திருநெல்வேலி மாநகரக் காவல் ஆணையர், அவர்கள் அனுமதி கோரும் இடத்திற்கு அருகாமையில் லூர்துநாதன் சிலை அமைந்துள்ள வளாகத்தின் பின்புறம் காலியிடத்தை மாற்று இடமாக கவனத்தில் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார் என்றும் அனுமதி கோரியுள்ள இடம் போக்குவரத்திற்கு இடைஞ்சலான இடம் என்றும், இந்த இடத்தில் சிலை அமைத்தால், அவ்வழியாகச் செல்லும் வாகனங்கள் மோதி சிலைக்கு சேதம் ஏற்பட்டு சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

4. மேலும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தல ஆய்வின் போது திருநெல்வேலி மாநகரக் காவல் ஆணையர், பாளையங்கோட்டை வட்டாட்சியர் மற்றும் பாளையங்கோட்டை மண்டல மாநகராட்சி உதவி ஆணையர் (பொறுப்பு) ஆகியோருடன் மேற்படி இடம் பாளையங்கோட்டை வட்டம், வார்டு 3, பிளாக் எண்.12, நகரளவை எண்.1153/1ஏ –ல் ஆய்வு செய்யப்பட்டு, சிலை அமைக்க அல்போன்ஸ் நினைவு நடுநிலைப்பள்ளியின் முன்பகுதியில் பாளையங்கோட்டை வார்டு அலுவலகத்திற்கு செல்லும் பாதையின் நடுவில் தெற்கு பஜார் சாலையின் நேர் எதிராக 3 ச.மீ அளவு கொண்ட இடம் பிற்காலத்தில் எவ்வித இடைஞ்சலும் ஏற்படாது எனத் தெரிவித்து அனைவரின் கருத்தும் கேட்டறியப்பட்டதாகவும் குறிப்பிட்டு, சிலை அமைக்க மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. டாக்டர் தேவநாதன், சிலை நிறுவனத் தலைவர் யாதவ மகாசபை என்பவர் அமைக்கவிருக்கும் முழு உருவ வெண்கலச் சிலையை, பாதுகாப்பு, அதன் பராமரிப்பு ஆகியவற்றை சிலை அமைப்பு குழு தலைவராகிய தானே ஏற்றுக் கொள்வதாக உறுதி அளித்துள்ளார் என்றும், திருநெல்வேலி மாநகராட்சியில் வீரன் அழகு முத்துக்கோன்

சிலையை அமைக்க அரசுக்கு பரிந்துரை செய்வதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. திருநெல்வேலி மாநகராட்சி மாமன்றத் தீர்மானத்தையும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பரிந்துரையினையும் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. திருநெல்வேலிமாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை வட்டம், வார்டு எண்.3, பிளாக் எண்.12, நகரளவு எண்.1153/1ஏ–ல் மாநகராட்சி சாலை நடுவில் " வீரன் அழகுமுத்து கோன் சிலை" நிறுவ, அரசாணை நிலை எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5)துறை, நாள்.20.11.1998 ல் குறிப்பிட்டு உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சிலை அமைப்பு குழுவிற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன்மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
டாக்டர்.தேவநாதன், சிலை நிறுவனத்தலைவர், யாதவ மகாசபை, எண்.44, பாந்தியன் சாலை, திரு காம்ப்ளெக்ஸ், 3 வது தளம், எழும்பூர், சென்னை–8. (மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம் மூலமாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகல்:
பொது (சட்டம் (மற்றும்) ஒழுங்கு) துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5/மாந1/அநமு2)துறை, சென்னை–9
இ.கோ/உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்